Registered as a News
Paper in Ceylon
P M G. No. H A
59/300 of 1939,

# இந்துசாதனம்

விரோதி வருடம்
( 1889 )
ஆவணி மாதம்
28 க்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கரவருஷ ஐப்பசிமீ ௩௦உ வெள்ளிக்கிழமை (16 நவம்பர் 1951) [இல. - ௬௧]

## திருமயிலை

— கோவை கிழார் —

**இடம்**

இக்காலச் சென்னை நகரில் ஒரு பகுதி. திருவல்லிக் கேணிக்கும் அடையாற்றிற்கும் இடையில் கடற்கரை ஓரமாக உள்ள பகுதி. திருவொற்றியூர் திருவான்மியூர் என்ற இரண்டு தியாகேசர் ஆலயங்களாகிய பாடல்பெற்ற தலங்களுக்கு இடையில் உள்ள ஒரு பாடல்பெற்ற தலம். மயிலை, மயிலாப்பு, மயிலாப்பூர் என்ற பெயர்களாற் பண்டைகாலமுதல் வழங்கி வந்த ஒரு சிறந்த புனித நகரம்.

**கோயில்**

தற்காலத்தில் உள்ள கோயில் கடற்கரைக்கு மேற்கே முக்கால் மைல் தள்ளி இருக்கிறது. அது நாற்புறமும் நான்கு பெரிய மாட வீதிகள் அமைய இடையில் உள்ளது. கோயில் மேற்குப் பார்த்த சந்நிதி, மேற்கே உள்ள வாயில் சிறியது. அக்கோபுரமும் வெகு சிறியது. கிழக்கே ஒரு கோபுரவாயில் உண்டு, அது மிகப் பெரியது. அக்கோபுரத்திற்கு எதிரே உள்ளது பிள்ளையார் சந்நிதியாகும். இந்த வேற்றுமை குறிப்பிடத்தக்கது. பதினாறுகால் கொண்ட திருவிழா மண்டபம் கீழ்க்கோபுரத்திற்கு எதிரே உள்ளது. இங்கேதான் மூர்த்திகளை வைத்து அங்கிருந்து நாலு வீதிகளிலும் எழுந்தருளச் செய்வார்கள். சுவாமி சந்நிதி மேலைவாசலில் இருந்தால், எவ்வாறு உற்சவம் நடைபெறுமோ அவ்வாறு இங்கே மேற்கு வாசலாக இருந்தும் கீழ்ப் புறமாகத் தொடங்கி உற்சவம் நடைபெறுகின்றது. கோயிலுக்குள் அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இரண்டு சந்நிதிகளையும் இணைக்கும் பெரிய மண்டபத்தில் ஒரு இடத்தில் இருந்து சுவாமியையும் அம்மனையும் ஒருங்கு தரிசிக்கலாம். சுற்றுப் பிரகாரத்தில் வடபுறம் அம்மையே சுவாமியை மயில் உருக்கொண்டு புன்னை மரத்தடியில் தவம் புரிவதைக் காணலாம். சிங்கார வேலர் சந்நிதி கோயிலின் தென்கிழக்கில் உள்ளது. வாயிலார் நாயனார் சந்நிதி தெற்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கி இருக்கின்றது. சுவாமி — காபாலீசர்; அம்மை — கற்பகவல்லி; விருக்ஷம் — புன்னை, தீர்த்தம் — காபாலி தீர்த்தம்.

**திருக்குளம்**

கோயிலுக்கு மேற்கே உள்ளது. வெகு அழகாகவும் பெரிதாகவும் அமைந்துள்ளது. கோயில் அளவை விடப் பெரியது தெப்பத் திருவிழா மிகச் சிறப்பாக இருக்கும். இந்தத் தெப்பக்குளத்தைப் பற்றி ஒரு கர்ணபரம்பரை வழங்குகின்றது. முகமதிய நவாப் இந்த இடத்தில் ஒரு பள்ளிவாசல் கட்டியிருந்தானும். வைதிகர்கள் அதனை வெறுத்தார்கள். அனமச்சன் இந்துவாக இருந்தான். நவாப் இல்லாத போது ஒரே இரவில் அந்த இடத்தில் குளத்தைத் தோண்டிவிட உத்தரவளித்துவிட்டான். நவாப் வந்த பிறகு தகுந்த காரணம் சொல்லிச் சமாதானப்படுத்தி விட்டு, மொகரத்தின்போது தாஜிகளை இக்குளத்தில் கழுவுதற்கு அனுமதி கொடுக்கச் செய்து குளத்தைத் திரப்படுத்தி வைத்தானும்.

**ஐதீகங்கள்**

தேவியார் மயிலுருக்கொண்டு பூசித்தது கண்டு ஊர் மயிலை எனப் பெயர் உற்றது. இராமபிரான் பெருமானைப் பூசித்துப்பேறுபெற்ற ஐப்பசி ஓணத்தில், பிரம்மோற்சவம் நடத்தினதாகத் தலபுராணம் கூறும், ஐப்பசி ஓணத் திருவிழா பூம்பாவைப் பதிகத்திலும் வருதல் காண்க, சிவநேசர் புதல்வி பாம்புக் கடியால் இறக்க உடலைச் சாம்பலாக்கிச் சேமித்துவைக்க, ஞானசம்பந்தர் பூம்பாவைப் பதிகம்பாடி உயிர்ப்பித்ததைப் பெரியபுராணம் கூறும். இவ்விழா பிரம்மோத்சவத்தில் எட்டாம்நாளில் நடைபெறும்.

**மற்றைச் சந்நிதிகள்**

திருக்குறள் அருளிய திருவள்ளுவர் கோயில், மூண்டகக் கண்ணி அம்மைத் தெருவில் இருக்கிறது. மற்றைச் சிவாலயங்கள் திருக்கோயிலைச் சுற்றிலும் பல தெருக்களிலும் உள்ளன. அவைகள் வெள்ளீசர், வாலீசர், மல்லீசர், வாணீசர், விருபாக்ஷீசர், தீர்த்தபாலீசர் கோயில்கள் முதலியன. மேலும் திருமால் கோயில்களும் இரண்டு உண்டு. மற்றும் இந்தத் தலமே இரண்டாம் ஆழ்வாரான பேயாழ்வார் அவதரித்த தலம். அவர் அவதரித்ததாகக் கூறும் கேணிகள் இரண்டு உண்டு. மாதவப் பெருமாள்கோயில் வடக்கேயும், கேசவப்பெருமாள் கோயில் தெற்கேயும் உள்ளன. குளங்கள் இரண்டிலும் தெற்கே உள்ளதின் பெயர் சித்திரக்குளம்.

**பண்டைய சரித வரலாறு**

இது ஒரு பண்டைய துறைமுகப் பட்டினம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே கிரேக்க ஆசிரியன தாலமி என்றவன் இந்நகரை மல்லியார்ப்ப என்கின்றான். கடைச் சங்க காலத்தில் இருந்த திருவள்ளுவர் இவ்வூரில வாழ்ந்தவர். அவருடைய நண்பர் ஏலேலசிங்கர் கப்பல் வர்த்தகம் செய்தது இவ்வூரிறான். திருநாவுக்கரசர் மூன்றிடங்களில் 'மயிலாப்பு' என்று கூறுகிறார். சம்பந்தர் 'மயிலை' என்கின்றார். பல்லவர் காலத்திலிருந்த திருமங்கையாழ்வார் 'மாடமாமயிலைத் திருவல்லிக் கேணி' என்ற பாடலில மயிலைக் குறிக்கின்றார். நம்பியாரூரர் 'தொன்மயிலை' என்கின்றார். அவர் காலத்திலேயே இந்நகர் தொன்மை பெற்றிருந்தது. நந்திப்பல்லவன நம்பவர்மன் காலத்திற் பொறித்த கல்வெட்டு ஒன்றில் மயிலையில் அரச குடும்பத்தினர் வசித்தனர் என்று கூறப்பட்டுள்ளது. சோழர் காலத்தில் பல கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டன. அவைகளில ஒன்று முதலாம இராஜராஜ சோழன் கல்வெட்டு ஆகும். மற்றொன்றில் 'நானு தேசு' என்ற வாணிபச் சங்கம் இருந்தமை குறிக்கப்பட்டுள்ளது. மற்றொன்றில் 'பூம்பாவை' என்ற சொல் வருகின்றது. சேக்கிழார் சுவாமிகள இவ்வூரை மயிலை என்றும, 'மயிலாப்பூர் என்றும் குறிக்கின்றார். பூம்பாவைச் சரிதம் முற்றும் அவா அருளிச் செய்திருக்கின்றார், விஜய நகரத்தார் காலத்தில் வாழ்ந்த அருணகிரிநாத சுவாமிகள (1450) இவ்வூரை, 'கடலக் கரைதிரை அருகே சூழ் மயிலைப்பதி' என்கின்றார். பிறகு 1214-ல் இந்நகர் போர்த்துக்கீசியர் என்ற பறங்கியர் கைக்கு வந்தது. அதுவரை கோயில கடற்கரையில் இருந்தது. அவர்க்கும் பிற சமயத்தவர்களுடைய சின்னங்களை அழிப்பதே தொழில். இலங்கையில திருக்கோணமலை, திருக்கேதிச்சரம், துளுவநாட்டில கோவர் முதலிய தலங்களில் இருந்த கோயில

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## தோத்திரம்

திருஅங்கமாலை.

திருச்சிற்றம்பலம்

தலையே நீவணங்காய் - தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத் தலையே நீவணங்காய்.

உற்றா ராருளரோ - உயிர் கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லானமக் குற்றா ராருளரோ.

திருச்சிற்றம்பலம்

— அப்பர் சுவாமிகள்.

## ஆருயிர்த் தியாகஞ் செய்த ராமநாயகவின் குடும்பம்

அவரது மனைவி பத்திரிகை நிருபருக்குச் சொன்னவை

"என் கணவர் பெரிதுஞ் சிவகாருண்ணியமுடையவர், ஒரு ஈயானும் இறப்பதைஅவர் சகிக்கமாட்டார்; புகைரத ஆபத்தில் அகப்பட்ட அந்தச் சிறுமியை இன்னாரென அவர் முன்பறியார்; அவரிடத்து இயல்பாகவுள்ள இரக்கமே அச் சிறுமிக்கு நேர்ந்த ஆபத்தைக் காக்கவும் தம்முயிரை விடவுஞ்செய்தது; நாங்கள் விவாகஞ் செய்து 12 வருடமாகின்றன; இருவரும் அந்நியோந்நியமாகவே வாழ்ந்தோம்; என்னைச் "சீதாதேவி" என்றே எந்த நேரமும் அன்புடன் விளிப்பார்; என் மடியிலிருக்குங் குழந்தையே எண்மரிலும் இளையது; இது மூன்றுமாசக்குழந்தை; பெயர் ரஞ்சன்; மூத்த பிள்ளைதான் மகன்; வயசு 11 ஏனைய எழும் பெண் பிள்ளைகள்; இவளுடைய பெயர் விஜயசிறீ; அடுத்தபிள்ளையின் வயசு9 பெயர் புஷ்ப; மற்ற இருவரும் இரட்டைப் பிள்ளைகள், வயசு 7 ஒன்றின் பெயர் சோமாவதி, மற்றதின் பெயர் சுவர்ணவதி; அடுத்த பிள்ளையின் பெயர் இந்திரா, வயசு 6, இந்த ஐந்துபேருந்தாம் பள்ளிக்கூடத்திற்குப் படிக்கப்போய் வருபவர்கள்: மற்றப் பிள்ளையின் வயசு 3½ பெயர்சித்திரா; அடுத்த பிள்ளையின் பெயர் ராமியா, வயசு 2; இப்பிள்ளைகளுள் மூததுவர்களிருவருமே தங்கள தகப்பனுக்கு நேர்ந்த கதியை யுணர்ந்து வருந்துபவர்கள்; ஏனைய பிள்ளைகள் விரகறியாதவர்கள்; நாங்கள் குடியிருக்கும் ஒரு ஏக்கர் கொண்ட வளவும் வீடுமே யொழிய வேறு காணிபூமியில்லை; அவருடைய உழைப் பல்லாமல வேறு வருவாயுமில்லை"

பத்திரிகை நிருபர் அந்தக் கைம்மையைப் பரிவுடன் பார்த்து "அம்மே, உங்களுக்கு ஏதும், உதவி செய்யக்கூடிய இனசனமில்லையோ" என்று பரிவுடன் வினவிய போது, ராமநாயகவின் பத்தினி அயலில் நின்ற எழுபிள்ளைகளையும தன்னிருபக்கலிலும சேர்த்து நிற்கவிட்டுக்கொண்டு கண்ணீர்சொரிந்தாள், பின்னர் ஒருவாறு தேறிக் கண்ணீரையுந் துடைத்துக்கொண்டு "ஐயா, என் கணவனுருடைய பெற்றாரும் இறந்துபோனார்கள்; என் தகப்பனாரும் மோசம் போய்விட்டார்; என் சகோதரர்களுள் மூத்தவர் ஒரு பௌத்தகுரு; மற்றவர் சுகாதாரப்பகுதிப்பரிசோதகர்; அவருக்கும எட்டுப் பிள்ளைகளுண்டு; அடுத்தவர் வியாபார சமுதாயத்திலிருந்து வேலைபழகுகிறார்; மற்றவர் பிழைப்பின்றிச் சும்மாவிருக்கின்றார். என விடை கூறினள்; "உங்கள் குடும்பத்தின்பொருட்டு எங்கள் பத்திரிகை மூலமாக நிதி சேர்க்கத் தொடங்கியிருக்கிறோம்; சேர்ந்த பணத்தைத் தரும்படி கொண்டுவந்திருக்கிறேன்; இதற்குள் 100 ரூபா பெறுமதியான உண்டியலும், இருக்கிறது; மாற்றிப் பணம பெற்றுக்கொள்ளலாம்" என்றுசொல்லிப் பத்திரிகை நிருபர் தாம்கொண்டுபோன பணத்தையும் உண்டியலையுங் கொடுத்தபோது, திரு. ராமநாயகவின் பத்தினி முகமலர்ச்சிகாட்டி நன்றியறிதலோடு அவற்றை ஏற்றுச் சிறிது ஆறுதலடைந்தாளாம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ், கரஹு ஐப்பசி மீ ௩௦ உ வெள்ளிக்கிழமை

## "உற்றவிடத்து உயிர்வழங்குந்தன்மையோர்"

"உற்றவிடத்து உயிர் வழங்குந் தன்மையோர் பற்றலரைக் கண்டாற் பணிவரோ" என்பது ஒளவைப் பிராட்டியாரின் செவ்விய வாக்காகும்; என்ன உற்றவிடத்து? பிறர்க்கு யாதாயினும் ஆபத்து உற்றவிடத்தில்; பிறர்க்கு ஆபத்து நேர்ந்தவிடத்திலே தம்முடைய உயிரைக் கொடுத்து அந்த ஆபத்தை நீக்கிய பெருமை, இந்திரன் தனக்கு அசுரரால் நேர்ந்த ஆபத்தை நீக்க வேண்டிப் புதிய வச்சிராயுத மொன்றை ஆக்கி அசுரரை வெல்லுதல் முடியுமென அறிந்து, அவ் வச்சிராயுதத்தைச் செய்தற்பொருட்டுத் தமது முதுகெலும்பைக் கேட்க, உடனே, தம் முதுகெலும்பை இந்திரனுக்கு வழங்கிவிட்டுத் தம்முயிர் நீத்த ததீசி முனிவருக்கு உண்டென்பர்; தன்னைத் தஞ்சமென்றடைந்த சிறைப் புறாவைக் காக்கவேண்டி, அதனைத் துரந்து வந்த வேடன் கேட்ட பிரகாரம் தனது உடம்பி லுள்ள ஊனையரிந்து வழங்கி அதனால் உயிர் மாளாது இறைவனருள் பெற்ற சிபிச்சக்கரவர்த்திக்கும் உற்றவிடத்தில் உயிர் வழங்கும் பெருமை யுண்டென்பர். இப்படிப்பட்ட உத்தமர்களின் செயற்கருஞ் செயலை யுத்தேசித்தே திருவள்ளுவரும்,

"அன்பிலார் எல்லாந்
தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு"

எனக் கூறிப்போந்தனரென்று திருக்குறளுக்கு உரைகண்டபரிமேலழகர் முதலாம் உரையாசிரியர்கள் தத்தம் உரையில் எடுத்துக்காட்டியுள்ளனர்.

"இவைகளெல்லாம் அக்காலத்தில் நிகழ்ந்தன; இவை நிசமோ அல்லவோ, யார் கண்டார், இக் காலத்தும் அப்படியான செயற்கருஞ் செயலைச் செய்தா ருண்டோ" என்று யாரும் ஆசங்கை நிகழ்த்தவுங் கூடுமல்லவா? இக்காலத்திலும் அப்படியான செயல் "இலைமறை காய்போல்" எங்கேனும் நிகழ்ந்திருப்ப, நாம் அறியாமலிருத்தலுங் கூடும்; ஆனால் தான் பெற்ற பிள்ளையின் உயிருக்கு ஆபத்து நேர்ந்தவிடத்து, அந்த ஆபத்தை நீக்கச்சென்று தன் பிள்ளையின் உயிரைக் காத்தபோது தன் னுயிரை விட்ட தாயார் இருவர் மூவரை நாம் அறிவோம்; ஆனாலும், அந்தச் செயல் பிள்ளைப்பாசத்தாற் செய்த செயலென்று சிலர் ஞாயஞ் சொல்லக்கூடும்.

ஆனால், இற்றைக்குச் சில தினங்கட்கு முன்னர் இந்த இலங்கையிற் பிறந்த திரு. ராமநாயக என்னும் வீரர் செய்த உயிர்த்தியாகம், தம்முடம்பிலுள்ள என்பையும் தசையையும் முறையே இந்திரனுக்கும், புறாவின்பொருட்டுவேடனுக்கும் வழங்கிய ததீசி,சிபி என்னுமிவர்கள் அந்நாளிற்செய்த தியாகத்தைக் காட்டிலும் மிகமிக மேலானதெனலாம். எப்படி? இந்திரன் வந்து தம்மை இரந்து கேட்ட பிறகே ததீசிமுனிவர் தம்முதுகெலும்பை அவனுக்குக் கொடுத்தார்; தான் துரந்துவந்த புறவை, இல்லையேல் அப்புறவின் நிறை கொண்ட தசையைத் தரும்படி (மாயமாக வந்த) வேடன் கேட்ட பின்பே சிபிச் சக்கரவர்த்தி தம் முடம்பிலுள்ள தசையை அரிந்து கொடுக்கலானார். இந்த உத்தம தியாகியாகிய திரு. ராமநாயக செய்த அருஞ் செயல் அவை போன்றனவல்ல; அவைகளைக் காட்டிலும் மிக மேலானவை என நாம் சொல்வதற்குக் காரணம ஒருவர் கேட்டு, ஒருவர் சொல்லி ஆபத்திக் காக்க முற்பட்டுப்போனவரல்லர் திரு. ராமநாயக.

பனிப்பிட்டியா புகைரதஸ்தானத்தில் ஒரு நண்பருடன் பேசிக்கொண்டு நின்றார் திரு ராமநாயக; அந்தத் தானத்திற் சில நிமிஷங்கட்கு முந்தி வந்து நின்ற புகைரதம், தானத்தை விட்டுப் புறப்படுகிறது; அதே க்ஷணத்தில் வந்த ஒரு பள்ளிக்கூடச் சிறுமி ஓடத்தொடங்கிய புகைரதத்தில் ஓடிப் போய் ஏறுகிறாள்; ஏறியவிடத்திற் கால்தவறிப் புகைரதத்திற்கும் மேடைக்குமிடையே வீழ்கின்றாள்; சிறுமிக்கு நேர்ந்த ஆபத்தைக் கண்டார்; ராம நாயக, மனஞ் சகியாது சரேலென ஓடிப்போய் அந்தச் சிறுமியை மீட்க முயன்றவிடத்தில், அவளோடு தாமும் மிதி தவறிப் புகைரதத்திற்கும் மேடைக்குமிடையே வீழ்ந்தார்; வீழ்ந்தவர் சிறுமியை மீட்டுவிட்டுத்தாம் மாண்டார்! இந்த ராமநாயக அந்தத் தானத்தில் அச் சிறுமிக்கு நேர்ந்த ஆபத்தைப் பார்த்துக்கொண்டு ஆவுரிஞ்சுதறிபோல் அசையாது நின்ற ஏனையோரைப்போலத் தாமும் சும்மா நின்றிருந்தால் இன்றும் உயிரோ டிருக்கலா மல்லவா? ஆபத்தைக் காத்தலின்றி அவர் உயிரோடிருந்தென்ன? இல்லாதொழிந்தென்ன? ஆறிலுஞ்சா, நூறிலுஞ்சாநேருந்தானே! ராமநாயகவின் பூதவுடம்பு அன்று அழிந்ததெனினும், அவரது புகழுடம்பு என்றேனும் அழிவதுண்டோ! "என்றுமிப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்பதுண்டோ" என வச்சிர யாக்கை படைத்த சூரபன்மன் கூறியதாகக் கந்தபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் எவர்க்காயினும் பேராபத்து நேர்ந்தவிடத்து அதனைஉடனே நீக்கிவிடவேண்டுமெனவும், நீக்கச் சென்றவிடத்துத், தன்னுயிர்க்கு இறுதி வரினும் பின்னிற்கவொண்ணாதெனவும், தம்முயிரை மாத்திரம் பாதுகாக்க நோக்கங் கொண்டு பிறர்க்கு நேர்ந்த ஆபத்தைக் காவாதொழிபவர், பாவம் பழி நரகத் துன்பமென்னுமிவற்றிற் காளாவரெனவுங் கந்தபுராணத்திற் பின்வருமாறு கூறப்படுகின்றது:-

"எவரேனும்
இடருற்றனராகி
ஒவில் துறையோன்
றுளரேல் அதுமுடித்தற்(கு)
ஆவி விடினும்
அறனே, மறுத்துளரேற்
பாவமலது
பழியும் ஒழியாதே"

திரு. ராமநாயக அச்சிறுமியைக் காக்கவேண்டித் தம்முடைய உயிரை விட்டதற்குக் காரணமென்ன? தம்முடைய எட்டுக் குழந்தைகட்கும் இந்தச் சிறுமிக்கு மிடையே பேதம் பாராட்டாமையே; இவளும் தம குழந்தைகளு ளொன்றென்றே யெண்ணினர். இவர் சீவகாருண்யம் பெரிதுமுடையவர்; ஒரு ஈதானும் இறக்க மனஞ்சகிக்க மாட்டாரென இவரது மனைவியார் சொல்வது நிசமாகும். இவரை யிழந்த இவருடைய குடும்பத்தின் நிலைமை பரிதாபமானது; (அதன் வரலாற்றை இற்றைப்பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளியிட்டுளேளம்) ஆனாலும் இத்தியாகியின் பெண்டிர் பிள்ளைகளை ஆண்டவன் கைவிடமாட்டான்; உலகத்தில் நிகழும் தருமதேவதையும் இக் குடும்பத்திற்கு உதவி செய்ய முன்வந்திருக்கின்றது; தருமசிந்தனை யுடையார் பலர் திரு. ராமநாயகவின் மனைவி மக்களுக்குப் பொருளுதவி செய்தற்கு முன்வந்திருக்கின்றனர். கொழும்பு நகரிற் பிரசுரமாகும் ஆங்கில தினசரிகளுளொன்றாகிய "அப்ஸேவர்" பத்திரிகையின் அதிகாரிகள் தம்பத்திரிகை மூலமாக, தலைவனையிழந்த இக் குடும்பத்தின் பொருட்டுப் பொருளுதவும்படி விண்ணப்பஞ் செய்து பணஞ் சேர்த்தனுப்பி வருகிறார்களாம்.

# உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் — 29)

### "பெண்களோடு பெண்கள் எதனையும் பேசிக் கொள்ளலாம்"

"அப்படியானாற் சந்தோஷம்! இன்று காலை என்னிடம் வந்த சகோதரி கமலாவிற்குப் பட்டினத்தைக் காட்டலாமென்ற நோக்கத்தோடு சகோதரியுடன் புறப்பட்டுவந்தேன; அதை நாளைக்குப்பார்க்கலாம; நீர் ஏறிவந்த இரதத்தைத் திருப்பி அனுப்பிவிட்டு எங்களுடன் வரலாம்; பிறகு எங்கள் இரதமூலம் உம்மை உமது இடத்திற்கு அனுப்பி வைக்கலாம்" எனப் பத்மநாதன் கூறலும், ராதாவும் அப்படியே செய்துவிட்டு வந்து இரதத்திலேறிக் கமலாவின் பக்கத்தில் இருந்தான்; இரதம் பத்மநாதன் சொற்படி மீண்டு அவன் வாசஸ்தானத்தை யடைந்தது; மாலை 6 மணியாதற்குச் சற்று முந்தி இரதத்தை மீளக் கொண்டு வரும்படி சொல்லிச் சாரதியை அனுப்பிவிட்டு மூவரும் பத்மநாதன் வாசஸ்தானத்திற் போயிருந்தார்கள். பல விஷயங்களைப்பற்றிக் கலந்து பேசினார்கள்; இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது, பத்மநாதனைக் காணும்படி யாரோ தலைவாசலில் வந்து நிற்பதைக் கண்டு அவன தலைவாசற்பக்கம் போய்விட, அற்றம் பார்த்திருந்த கமலாட்சி ராதாவைநோக்கி "உங்கள் விவாக விஷயம எவ்வளவிலிருக்கிறது" என்று இதமாக வினவ, ராதா அவளைப் பார்த்து "அக்கா, பெண்களோடு பெண்கள் எதனையும் பேசிக்கொள்ளலாம; உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேவ; உங்கள் அண்ணனுக்கு என்னை வாழ்க்கைத் துணைவியாகக் கொள்வதற்குப் பூரணசம்மதமுண்டு; எனக்கும் முந்தி அப்படியே ஒரு விருப்பமிருந்தது; ஆனால் இப்பொழுது அந்த விருப்பஞ் சில காரணத்தினாற் குறையத் தொடங்கிவிட்டது" என்று கூசிக்கூசிச்சொன்னாள்; "ஞாயமென்ன என்பதை நான் அறியலாமோ" என்று ஆவலுடன் கேட்டாள் கமலாட்சி. "அக்கா, ஞாயம் வேறொன்றுமல்ல; அவர்மீது நான் எவ்வகையான குறையுஞ் சொல்ல முடியாது; அவர் உத்தம புருஷன்; ஆனால் அவருக்கு வாழ்க்கைத் துணைவியாக அவருடைய சொந்தமைத்துனியைப் பெரியோர் பெற்றார், முந்தியே நிச்சயித்திருக்கிறார்களென்பதை நான் பிந்தியே அறிந்தேன்; அப்படியானால் நான் அவரை விரும்புவது சரியல்ல, அக்கா நான் கேள்விப்பட்டது நிசந்தானா? உள்ளதைச் சொல்லுங்கள்" என்று சொல்லி வினவினாள் ராதா. "என தங்காய், என் அண்ணர் அதைப்பற்றி இதுவரையில் ஒன்றுஞ் சொல்லவில்லையே" என்று கமலாட்சி கேட்க, "அக்கா, அவர சொல்லியிருந்தால் உங்களை நான் கேட்கமாட்டேனே; அவர் ஒருபோதும் அதைப்பற்றிச் சொல்லவில்லை" என்று கவலை மீதூரச் சொன்னாள் ராதா.

### "இதுதான் செய்தி, தங்காய்"

"தங்காய், நீர் கேட்டது நிசம்; என்னண்ணருக்குச் சொந்த மச்சாளைச் சின்ன வயசிலேயே விவாக நிச்சயஞ் செய்திருக்கிறார்கள் எங்கள் சுற்றத்தார்; இவரும் தமது சொந்த மைத்துனியைக் கல்யாணஞ் செய்வதாக எண்ணியிருந்தார்; ஆனால் இப்பொழுது சில காலமாக இவருடைய மனம மாறிவிட்டதென எண்ணக் கிடக்கின்றது; இவருக்குக் கல்யாணத்தை நிறைவேற்றி வைப்பதற்கு இவருடைய பெற்றார் சுற்றத்தார் பலமுறை முயற்சி செய்தார்களேனும், அண்ணர் அதற்கு இடந்தருகின்றிலர்; ஏதுங் காரணங் காட்டித் தவணையிட்டு வருகின்றார்; இந்த விஷயமாக முந்த நான் வந்தபோது உம்மையுஞ் சந்தித்தேன; உம்முடைய அறிமுகம் எனக்குக் கிடைத்தது; இவர் கல்யாணத்திற்குத் தவணையிட்டு வருதலால், குறித்த பெண மாத்திரமல்ல, இருபகுதியாருடைய பெற்றார் சுற்றத்தாரும பெரிதும வருந்துகின்றார்கள்; அண்ணருக்கு என்னிடத்தில சற்று விசுவாசமுண்டு; அந்தப் பெண்ணுக்கும்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

## உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (18-11-51—24-11-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இது ஒரு இழுவலான வாரமாகும். தேக சாவீனம் மனச்சஞ்சலம் சேரும். உத்தியோகச் சங்கடங்களுமுண்டு. பிரதானமான கருமங்களைத் தவிர்க்க. வாரமுடிவிற் சத்துருக்களுக்கு அபஜெயமுண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

இச்தக்கிழமை இனசனத்தாரோடு சாவதானமாக நடந்துகொள்க. குடும்ப ஆறுதலில்லை. ஆனால் புதிய கருமங்களால் நினைத்த பலன் வரக்கூடும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

பெரியாரிடத்தில் ஏதும் உதவியைப் பெற ஏற்றவாரம். பொருள் வரவுமுண்டு. கிழமை முடிவிலே ஆண்களுக்குப் பெண்களாலும பெண்களுக்கு ஆண்களாலும் உதவியுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

கிழமை மத்தியிலே அபவாதங் கேட்க நேரும். விபரீத விளக்கமுமுண்டு. எவரோடும் வாதஞ் செய்யவொண்ணாது செய்யும் முயற்சிக்கு அனுகூலமான வாரம். பொருள் வரமுவுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

குடும்ப விஷயமாகச் சஞ்சலம்நேரும். உத்தியோக விஷயத்திற் கஷ்டங்களும் பிணக்கும் நேரக்கூடும். புதிய சிநேகிதரை நம்பவொண்ணாது.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

பொருள் லாபமுள்ள வாரம்; சகோதரர் வாயிலாக உதவியும் லாபமுமுண்டு; புது முயற்சிகளால் நினைத்த கருமங் கைகூடும்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

இவ்வாரத்தில் எல்லாப் பிணக்குகளையுந் தீர்த்துக்கொள்க; வரவுக்கு மேற்பட்ட செலவுண்டு; குடும்பத்திற் பிணக்கு நேரக்கூடும்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

சொந்த விஷயமாகச் சங்கடமான வாரம்; ஞாயிற்றுக்கிழமை அவதானமாக நடாடுக; வாரத்தின் பிற்பகுதியிற் புதிய கருமங்களைச் செய்யலாம்; கோள்மூட்டுவோர் அளர்அற்றுவோர் விஷயத்தில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

திங்கள் தொடக்கம் புதன் கிழமை காலைவரை அவதானமாக நடந்துகொள்க; எவரோடும் வாதஞ்செய்ய வேண்டாம்; கிழமையின் பிற்பகுதி கருமஞ் செய்தற்கு வாய்த்த காலம்; ஆறுதல் பிரயாசை வேண்டும்.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

வாரத்தின் முற்பகுதி கருமஞ் செய்தற்கு அனுகூலமானது; புதன் கிழமை மத்தியானத்தின் மேல் வெள்ளிக்கிழமை முடியச் சாவதானமாக நடந்துகொள்ளவும்; கிழமை முடிவில் நல்ல செய்தி கிட்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

கிழமையின் கடைசி இரண்டு நாளொழிய ஏனையவை கருமஞ் செய்தற்கு வாய்த்த நாட்களாம்; மன ஆறுதலுங் குடும்ப ஒற்றுமையுமுண்டு; கோபத்தை அடக்குக.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

பண விஷயமாக வருங் கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்க; புதிய முயற்சியால் ஏதிரமான சில நன்மையுண்டு; கிழமை முடிவில் நண்பரிடமிருந்து நல்ல செய்தியுண்டாம்.

---

யாழ்ப்பாணம்
**இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை**

## புதுக் கட்டடம்

22-6-49ல் நடந்த இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரிய சங்கப் பொதுக் கூட்டத்தில் இவ் வித்தியாசாலைக் கட்டடத்தைப் புதுக்கிக் கட்டும் கைங்கரியத்தைத் தொடங்கவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியது. இதை ஆதரித்துப் பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர்கள், மற்றை அபிமானிகள் டை கட்டட நிதிக்கு இதுவரை 7296 ரூபா 76 சதம் மனமுவந்து உதவியுள்ளார்கள்.

இவ் வித்தியாசாலைக்காக வண்ணார்பண்ணைக் கஸ்தூரியார் வீதியில் இந்துக் கல்லூரி அதிகார சபையார் புதிதாக வாங்கிய 9 பரப்பு விசாலங்கொண்ட நிலத்தில் 17-8-51 வெள்ளிக் கிழமை நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், இந்துக் கல்லூரி - அதன் கிளைப்பாடசாலைகளின் மானேஜரும் முடிக்குரிய "அத்துவக்காத்து"மாகிய - திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்களால் புதுக்கட்டடத்திற்கு அத்திவாரமிடப்பட்டுக் கட்டட வேலைகள் நடந்து வருகின்றன. இக் கட்டடத்திற்குரிய மதிப்புச் செலவு ரூபா 30000/= ஆகும்.

இக்கட்டட வேலைகளைப் பூர்த்தியாக்குவதற் குதவியாகப் பண உதவி அளிக்கும்படி பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மற்றை அபிமானிகள் யாவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

அ. அருளம்பலம்
மு. கணபதிப்பிள்ளை
இணைக்காரியதரிசிகள்,
இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை
பெற்றோர் - ஆசிரிய சங்கம்
12—11—51

M. 186 16—11—51.

---

# உலகம் பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஏன்னிடத்தில் அதிக நம்பிக்கை; ஆனதினால் நான் இதனை ஒழுங்கு செய்துவிடலாமென் றெண்ணித்தான். தங்காய், முந்தியும் இங்கு வந்தேன்; இப்பொழுதும வந்திருக்கிறேன்; இந்தமுறை இவ்விவாக விஷயமாக ஒரு முற்றுப்பண்ண வேண்டுமென்பதுதான் என்னேக்கம்; அண்ணர் என்ன சொல்லுகிறாரோ நான் அறியேன்" எனத் துயரத்தோடுசொன்னாள்கமலாட்சி; "அக்கா இவர் கடத்துவதற்குக் காரணமென்ன என்பது உங்களுக்குத் தெரியாதோ?" என்று ராதா கேட்க, "கல்வியிற்சிறந்திற் கட்டழகிற் சிறந்த இன்னொரு கன்னிகையைக் கல்யாணஞ் செய்ய எண்ணங் கொண்டிருக்கிறார் என எங்களூரிலுள்ளவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்; அது நிசமோ, அல்லவோ, நானறியேன் தங்காய்; மேலும், எனது அண்ணர் தன்னைப் புறக்கணித்து இன்னுமொரு கன்னிகையைக் கல்யாணஞ் செய்யப் போகின்றார் என்று கேளவிப்பட்ட நாள்தொட்டு, அந்தப் பெண் கவலை மேலீட்டினால் மனமுடைந்து தனக்கு இனிக்கல்யாணமே வேண்டாமென்று வைராக்கியங் கொண்டுவிட்டாள்; அல்லும் பகலும் தங்கள் குலதெய்வமாகிய விநாயகக் கடவுளையே வழிபட்டு அந்தத் தெய்வத்திற்குத் தொண்டு செய்து வருகிறாள்; இதுதான் செய்திதங்காய்" என்று சொல்லி முடித்தாள் கமலாட்சி. இவைகளையெல்லாம் ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்த ராதா, மனக்கலக்கங் கொண்டாள்; வருந்தினாள்; அந்தக் கல்யாணங் குழம்பியதற்கும், அபலையாகிய ஒரு கன்னிகை கல்யாணம் வேண்டாமென்று கவலைப்பட்டு வைராக்கியஞ் செய்தற்கும் தானே காரணியென்று சிந்தித்தாள்; இந்தச் சிந்தனை ராதாவின் உள்ளத்தைப் பெரிதும் உபாதித்தது; பெண்ணின் பெயர் என்ன என்று ராதா கேட்க, "வனசாட்சி" என்று கமலா சொன்னாள்; "இந்தக் கல்யாணத்தை நானே முயற்சி செய்து நிறைவேற்றி வைத்தாற்றான் என்னைப் பிடித்த பழி தீரும்" என்று தன்னளவில் நிச்சயித்துக் கொண்டு ராதா கமலாட்சிக்குவதோ சொல்வதற்கு வாயெடுப்பதற்கிடையில், தலைவாசற்பக்கஞ் சென்றிருந்த பத்மநாதன் மீண்டு அங்கே வந்தான். (வரும்)

---

# திருமயிலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

களை அழித்துக் கிறிஸ்துவப் பள்ளிகளாகக் கட்டினதுபோல, இங்கும் இருந்த பண்டைக்கோயிலை இடித்து அதன் கற்களைக் கொண்டு 'செந்தோம் ஆலயத்தைக் கட்டினார்களாம். சமீபத்தில் அங்கே பழுது பார்க்கையில், பல பண்டைச் சின்னங்கள் கிடைத்தனவாம். மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் இப்போதுள்ள ஆலயம் கட்டப்பட்டுள்ளது. பழைய கற்களையும் புதுக் கற்களையும் கொண்டு கட்டினார்களாம். அப்படிக் கட்டினதிற் பல கல்வெட்டுக் கற்கள் சிதைந்துபோயின. பல கல்லறைக் கற்களும் அதிற் சேர்ந்துவிட்டன. 1672-ல் மூர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் சண்டை நடந்தது. அப்போது பிரெஞ்சுச் சேனை இந்த ஆலயத்துட் புகுந்து கொண்டதாம். இந்த ஆலயத்துத் தளவரிசையொன்றில் 1646-ம் ஆண்டுக் குறிப்பு ஒன்று இருக்கிறது. 1798ல் வரையப்பட்ட சென்னைப் படம் ஒன்றில் இப்போதுள்ள குளம் குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அக்குளம் அதற்கு முந்தியே இருந்திருக்கவேண்டும். கோயிலின் கீழைக்கோபுரம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பும், திருக்குளத்தின் படியமைப்பு சுமார் 50 ஆண்டுகளின்போதும் கட்டப்பட்டனவாம்.

## நூல்கள்

இந்தத் தலத்தைப்பற்றித் தேவாரப் பதிகங்களைத் தவிர வடமொழியில் ஒரு புராணமும், தமிழ் மொழியில் இரண்டு புராணங்களும் பல பிரபந்தங்களும் உண்டு. வடமொழிப் புராணம் 11 அத்தியாயங்களைக் கொண்ட கபாலீசுவர ஸ்தல மகாத்மியம் என்ற நூலாகும். அது கலியுகத்தில் 5022 (கி பி 1920) அச்சடிக்கப்பட்டது. தமிழில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்து மயிலைக்கிளை மடத்தில் இருந்த அமிர்தலிங்கத்தம்பிரான் இயற்றிய தலபுராணம் ஆகும். அது கலியுகம் 4995 (கி பி 1894) மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் இயற்றிய உரையோடு அச்சடிக்கப்பட்டது. மயிலை வாசியான புராணிகர் காதமுனி முதலியார் மற்றொரு புராணம் பாடியிருக்கின்றார். அதில் 806 செய்யுட்கள் உண்டு பிரபந்தங்களில் மயிலைத் திருவந்தாதி ஒன்று.

— சித்தாந்தம்

---

# வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

---

# ரேடியோ

* இசைத்தட்டு

**திருச்சி சனி நவம்பர் 17**

காலை 7 10 ஸ்ரீதாரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 வி கே லக்ஷ்மி பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 ஆங்கிலப்பேச்சு 2 தமிழில் செய்தி 2 10 ஆங்கிலப்பேச்சு 2 30 சித்ரகானம்* 2 45 முடிவு.

மாலை 5 30 எ எஸ் தண்டபாணி குழுவின் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்ய கோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 மதராசிலுள்ளபடி 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 சின்மோல் லாஹிரி ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு நவ 18**

காலை 7 10 ஸ்ரீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 சித்ரகானம்* 12 30 சூர்யகாந்தி சதம்பநிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 வாத்ய இசை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 பி எஸ் ராஜா ஐயங்கார்* 2 தமிழில் செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 சென்டு இசை நிகழ்ச்சி ஆ இ ரே வித்வான்கள் 3 முடிவு

மாலை 5 30 காரைக்குடி சங்கரி அம்மாள் வீணை 5 45 பி வி கணேசய்யர், சே ராமய்யா பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 திரைப்பட விமர்சனம் எஸ் மீனாக்ஷி 8 கும்பகோணம் பானுமதி பாட்டு டி என் உலகநாதன் வயலின் டி எ மீனாக்ஷிசுந்தரம் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 காரைக்குடி சங்கரி அம்மாள் வீணை 10 முடிவு

**திருச்சி திங்கள் நவ. 19**

காலை 7 10 ஸ்ரீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 டி எஸ் வேம்பு ஐயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1 நீங்கள் கேட்டவை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 லாரங்கி* 2 தமிழில்செய்தி 2 10 யஹோனூரி விவ சாக்ஸபோன்* 2 15 உயர்தரப் பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 எ கே சப்பையர் ஜலதரங்கம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்ய கோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 கோயில் கலைச் செல்வம் 8 தான வாத்ய கச்சேரி 8 30 டி கே பட்டம்மாள்* 8 45 ஆங்கிலப்பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 டி எஸ் வேம்பு ஐயர் பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் நவ 20**

காலை 7 10 ஸ்ரீதாரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 டி டி ஜயலக்ஷ்மி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 கோஷ்டிகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1 இசைவேளை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 வயலின்* 2 தமிழில் செய்தி 2 10 வி எ பால்ஸரா பியானோ* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 சமயபுரம் சுந்தரேசம் பிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 ஆர் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 ஈமனி சங்கர சாஸ்திரி வீணை வ. கண்ணன் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 சமயபுரம் சுந்தரேசம் பிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.

# பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம்

உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளை யவர்கள் செய்த பொழிப்புரையுடன்
விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு)

சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதகாலத்திற் சுவாமி கும்பிட வேண்டிய ஒழுக்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது;
விலை சதம் 40

வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்

பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸி.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ. 1—25ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்

மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.
விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்

மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகாநந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)

ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.
விலை ரூ. 1—25 ச.

ஈழமண்டல சதகம்:

ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் ... ... ரூ. 1·00

சைவ சமயசாரம்:

ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்று யுள்ளது. விலை சதம் 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கில மறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. மூக்தி வெளிவராதது.
விலை 60 சதம் (அணு 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to
PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai, Jaffna,



# சாலாமிஸ்ரி லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜ்ஜீரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருருத்தல் விலை ரூபாய் 25-00, அரைருத்தல் விலை ரூபாய் 12-50
காலருத்தல் விலைரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி; மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

## சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
நி 3/1 தட்டாதெரு
கோட்டைமுனை, மட்டக்களப்பு

எமதுவிலாசம்
M 92


## சாராயம் குடிப்போர்க்கு நேர்ந்த ஏக்கம்

சாராய விலை சடுதியில் இருமடங்காக உயர்த்தப்பட்டமை இக் குடிவகையை உபயோகிப்போரிடத்துப் பெருந் திகிலை விளைவித்து விட்டது. சாதாரண வகையான சாராயம் போத்தல் ஒன்று ரூபா 12 ஆகவும், விசேஷ வகை போத்தல் ஒன்று ரூபா 16 ஆகவும் இந்த மாதம் 12-ந் திகதி தொடக்கம் விலை உயர்த்தப்பட்டது. இதற்குமுன் எப்போதாயினுஞ் சாராய விலை இவ்வளவு உயர்த்தப்பட்டிலது. சாராய விநியோகம் கட்டுப்படுத்தப்பட்ட யுத்த காலத்திற்றுனும விலை இவ்வளவு வீதம் ஏற்றமடையவில்லை. அப்போது இருவகைச் சாராயமும் முறையாக ரூபா 8 ஆகவும் ரூபா 10 ஆகவும் விலைப்பட்டது. புறநாட்டுக் குடிவகைகளின் விலை உற்பத்தி செய்வோரால் உயர்த்தப்பட்டாலன்றி யாதும் மாற்றமடையாதென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் ஆக்கப்படும் ஜின் என்னுங் குடிவகையின் ஏற்றுமதித் தீர்வை கூட்டப்பட்டிருக்கிறது. ஒரு கலனுக்கு ரூ 45/25 ஆக இருந்த தீர்வை கலனுக்கு ரூ 104/18 ஆகக் கூட்டப்பட்டிருக்கிறது. "பீர்" பானவிலையும் ஏறும்போற் காணப்படுகிறது. கள்ளு விலை யாதும் மாற்றமடையாது முன்னிருந்தபடியே யிருக்கிறதாம்.


L K S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
!=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.



## தினவரவு இடாப்பு

பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் பலர் பிரேரித்தபடி எங்கள் தினசரி இடாப்புக்கள் உயர்ந்த காகிதத்திற் சிறந்த முறையில் அச்சிட்டு அழகுற அமைக்கப்பட்டுள்ளன.
விலை ஒன்றரை ரூபா.

மனேஜர்
சைவப்பிரகாச யந்திரசாலை
யாழ்ப்பாணம்.



## ஆசிரியர் தேவை

திருக்கோணமலை ஸ்ரீ சண்முகவித்தியாலய மகளிர் கலாசாலைக்கு, பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியை தேவை. விடுதிச்சாலைச் சௌகரியங்களுண்டு. எமக்குத் தெரிவிக்கவும்.

மனேஜர்
ஸ்ரீ சண்முகவித்தியாலயம்
திருக்கோணமலை.
M. 132 9, 13, 16—1951.



திறமான தேக்க மரங்கள் பல நீளிசுகளிலும்

திறமான குனிமார்க் ஓடுகள் 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி ரோட்
யாழ்ப்பாணம்

Std 2



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு

சராசரி சாசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "சாட்டேட்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
கிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-49


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna, on Friday November, 16 1951